தேவைப்படுகிறது என்பது முக்கிய காரணமாகும். அதைச் சுரங்கப் பாதையாக அமைக்கலாமா அல்லது மேம்பாலமாக அமைக்கலாமா என்ற கருத்து ஆராயப்பட்டது. அதற்கிடையிலே, இப்போது இருக்கிற சில அமைப்பு முறைகளையே மாற்றி, பாதைகளை மாற்றி "ஆல்டெர்னேடிவ் ரூட்ஸ்" ஆக வேறு வழிப்பாதையாக அமைக்க வாய்ப்பு இருக்கிறதா, அப்படி அமைப்பதன் மூலம் போக்குவரத்து நெரிசலை எந்த அளவிற்குத் தவிர்க்க முடியும் என்பது ஆராயப்பட்டது. இப்படிப்பட்ட நிலையிலே தான் சுரங்க இரயில் பாதை, சுரங்கப் பாதை ஆகிய திட்டங்கள் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன. இவைகளைப் பற்றிய ஆய்வுகள்—பரிசீலனை—முடிந்த பிறகு, எது சாத்தியமோ அது நிறைவேற்றப்படும்.

கொளுஞ்சிப்பட்டியில் புதிய ஏரி

*** 153. வினா—திரு. சீ. க. வடிவேலு:** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிறி வட்டத்தைச் சார்ந்த கரிகாலி ஊராட்சியிலுள்ள கொளுஞ்சிப்பட்டியில் புதியதாக ஏரி அமைக்கும் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இல்லை.

சிவாயம் குளம்

*** 154 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குளித்தலை வட்டம், சிவாயம் குளம் புதுப்பிக்கப்படும் திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: வேலை நடைபெற்று வருகின்றது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, இந்த சிவாயம் குளத்திற்கு நிலம் கையாகப்படுத்தப்பட்டு, நிலச் சொந்தக்காரர்களுக்கு நஷ்டயீடு கொடுக்கப்பட்டதா? இல்லை என்றால் விரைவிலே கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

1975 அக்டோபர் 31]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அதுபற்றி தகவல் இல்லை. நஷ்டயீடு இதுவரை கொடுக்கப்படாமல் இருந்தால், அங்கத்தினருடைய கேள்வியை வைத்தே விரைவில் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, இந்த ஏரியைப் புதுப்பித்த பிறகு எவ்வளவு ஏக்கர் பாசன வசதி கிடைக்கும்? எவ்வளவு உணவுப் பொருள் உற்பத்தியாகும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, அந்த விவரம் இல்லை; தனிக் கேள்வி போடவும்.

ஆந்திர மாநிலத்திலிருந்து நெல் அன்பளிப்பு

* 155 **வினா—திரு. என். கிட்டப்பா** : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆந்திர மாநில விவசாயிகள் தமிழ்நாட்டு வறட்சி நிவாரணப் பணிகளுக்காக நெல்லும், வைக்கோலும் அன்பளிப்பாகத் தர முன்வந்துள்ளனரா?

(இ) ஆமெனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) ஒரு மாநிலத்தில் இருந்து மற்ற மாநிலங்களுக்கு அரிசி போக்குவரத்துத் தடை இருப்பதினால், ஆந்திர மாநில விவசாயிகள் தமிழ் நாட்டுக்கு தர விழைந்த நெல்லை, மத்திய அரசு அனுமதிக்கவில்லை. ஆந்திரா மாநில விவசாயிகள் தர விழைந்த 10,000 டன்னைப் பொறுத்த வரையிலும், போக்கு வரத்துக் கட்டணத்திற்கு விதிவிலக்கு அளிக்க வேண்டுமென்ற ஆந்திர விவசாயிகள் சங்கக் கோரிக்கையை இரயில்வே நிர்வாகம் ஏற்றுக் கொள்ளாததால், இதையும் தமிழகத்திற்குக் கொண்டுவர இயலவில்லை.

திரு. என். கே. பழனிசாமி : சார், ஆந்திராவில் 'ப்ரோக்கன் ரைஸ்' ஏராளமான அளவு விலைபோகாமல் இருக்கிறது என்று சொல்லப்பட்டது. அதை நம்முடைய மாநிலத்திற்கு வாங்க